Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.26**

| | | | |
|---|---|---|---|
| Name: | அருண்குமார் | Calling: | காவல் ஆய்வாளர் |
| Father's Name: | பச்சையப்பன் | Religion: | |
| Village: | தொரைப்பாடி | Age: | 54 |
| Taluk: | வேலூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 16.06.2026

(எதிரி ஆஜர்)

அ.சா. 26 முதன்மை விசாரணை

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டம் தெள்ளாறு காவல் நிலையத்தில் காவல் ஆய்வளாராக பணியாற்றி வருகிறேன். கடந்த 28.02.2023 ம் தேதி காலை 09.30 மணியளவில் வாணியம்பாடி கிராமிய காவல் நிலைய உதவி ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது ராஜா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று வாணியம்பாடி கிராமிய காவல் நிலைய குற்றஎண் 83/2023 சட்டபிரிவு 279, 304(ஏ) இதச வின்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகார்மனு ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **முதல் தகவல் அறிக்கை அசாஆ8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் இவ்வழக்கில் 3 சிறார்கள் இறப்புற்றதால் இவ்வழக்கின் விசாரணை அதிகாரி காவல் துணை கண்காணிப்பாளர் என்பதால் வாணியம்பாடி காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் பார்வைக்கு வழக்குகோப்பை வைத்துக்கொண்டேன். மேலும், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவுப்படி இவ்வழக்கில் இறந்துபோன விஜய் என்பவரின் பிரேதத்தின் மீது வாணியம்பாடி அரசு மருத்துவமனை

சவக்கிடங்கில் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **விஜய் என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை அசாஆ9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** பிறகு தலைமைக்காவலர் 294 திரு.திருமூர்த்தி என்பவர் மூலம் உடற்கூறாய்விற்க்கு வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பிக்கொண்டேன். இது சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

விபத்து நடந்த நேரம் என்னவென்றால் 08.45. பொதுவாக 09.00 மணிக்கு பள்ளிகள் திறக்கப்படும் என்றால் சரிதான். வளையாம்பட்டிலிருந்து கிரிசமுத்திரம் பள்ளி செல்வதற்கு மலையடிவோரத்தில் ஒரு ரோடு உள்ளது என்றால் அது விசாரணை அதிகாரிக்கு தான் தெரியும். அந்த வாகனத்தின் உரிமையாளரை நான் விசாரித்தேனா என்றால் நான் எதுவும் விசாரிக்கவில்லை, புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த வாகனத்தில் எத்தனை நபர்கள் பயணித்தார்கள் என தெரிந்து கொண்டேனா என்றால் 5 நபர்கள். விபத்து ஏற்படுத்திய வாகனம் Fully Automatic என்றால் அது விசாரணை அதிகாரிக்கு தான் தெரியும். விபத்து ஏற்பட்டதாக சொல்லப்படும் பகுதி பார்வை குறைவான பகுதி என்றால் சரியல்ல. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்தை நான் சென்று பார்க்கவில்லை என்றால் காவல் துணைக்காணிப்பாளருடன் சென்றேன். நான் சம்பவயிடத்திற்கு சென்றிருந்தால் சம்பவயிடமானது பார்வை குறைவான பகுதி என தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. பிரேத விசாரணை சாட்சிகள் நடந்த சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என சாட்சியமளித்துள்ளனர் என்றால் சரியல்ல. நானும், என் உயர் அதிகாரியும் சரிவர புலன்விசாரணை செய்யாமல் அவசர அவசரமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இறப்புற்ற நபர்களுக்கு ஆதாயம் செய்வதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாகனத்தில் சென்ற 5 நபர்களில் எத்தனை பேருக்கு வாகன ஓட்டுநர் உரிமம் உள்ளது என விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் அவசரமாக பதிவு செய்த வழக்கில் எதிரிக்கு சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) அருண்குமார்

SRIPATHI K

JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR